


08.09.2025

## 36. கர்த்தரால் பரீட்சிக்கப்படுவோர், பாக்கியவான்கள்!

கல்தேயர் தேசத்தின் *ஊர்* என்ற இடத்தைவிட்டு தேவன் புறப்படச் சொன்னபோது, தான் சோதிக்கப்படுகிறேன் என *ஆபிரகாம்* அறியவில்லை. அதேபோல், உன் ஏக புத்திரனை *மோரியா மலையில்* பலியிடு! என ஆண்டவர் *ஆபிரகாமிடம்* கூறியபோதும், தான் கீழ்ப்படிவதற்கே கட்டளையிடப்பட்டதாக எண்ணினார்! ஆனால், தான் தேவனால் சோதிக்கப் படுவதாக சிறிது கூட அறியவில்லை. அதுபோலவே, தான் சோதிக்கப்படுவதை அறியாமலே *பேதுரு* சோதிக்கப்பட்டார்! *பவுலும்* அவ்விதமாகவே சோதிக்கப்பட்டார்! நாம் ஒன்றன்பின் ஒன்றாக ஏராளமான சத்தியங்களை அறிந்து கொண்ட பிறகு, பரிசுத்த ஆவியானவர் உறுதிபட கூறுவது என்னவென்றால், “இன்றுமுதல், இந்த மனுஷனுக்கு, நான் பரீட்சை நடத்துவேன்!” என்பதுதான். ஆகவே, நான் கர்த்தரால் பரீட்சிக்கப்படும் பாக்கியம் பெற்றவன்! என உணர்ந்து ஜீவித்திடக்கடவோம்!

– ரத்னம்